## திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 29.10.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1268** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான செப்டம்பர் 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1269** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் செப்டம்பர் 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1270** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்கவும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த **கணக்கெடுப்பு படிவங்கள், கொரோனா வைரஸ் தொடர்பாகவும் டெங்கு விழிப்புணர்வு பிரசுரங்கள், ஸ்டிக்கர், மருத்தவமுகாம் பேனர்கள் அபராதம் விதிக்கும் பேனர்கள், கன்ம்டெய்ன்மெண்ட் ஜோன் பேனர்கள், நோட் குறிப்புகள் போன்றவை** நோட்டீஸ் அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பேனர் விபரம் | Om Shakthi Enterprises | Bhavani Printer | Saraswathy Digital Printing |
|---|---|---|---|---|
| 1 | Dengue Awareness A5 Colour Phamplets | 4.00 | 4.75 | 4.50 |
| 2 | A3 Colour Corona Board | 50.00 | 60.00 | 55.00 |
| 3 | Unsize Fine Bill Book | 700.00 | 775.00 | 750.00 |
| 4 | F/B A4 Binding | 200.00 | 250.00 | 225.00 |
| 5 | Corona Fever Cases Form F/S Paper Single | 1.50 | 3.00 | 2.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Colour Pamphlets | | | |
| 6 | Dengue 52 Week A5 size Sticker | 8.00 | 10.00 | 9.00 |
| 7 | Corona Medical Camp Banner 6X4 Size | 600.00 | 675.00 | 650.00 |
| 8 | Corona Containment Zone Banner 3X2 ½ | 350.00 | 400.00 | 375.00 |
| 9 | Public Health Notice Banner 6X4 Size | 600.00 | 700.00 | 650.00 |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **Om Shakthi Enterprises** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்கவும் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு மற்றும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1271 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (COVID 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும், நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் ஆய்வு கூட்ட அறிவிப்பின்படி தினசரி பணியாளர்களின் பாதுகாப்பினை கருதி முககவசம் 15000 (**Mask**) தேவைப்படுவதாக துப்புரவு ஆய்வாளர் தன் குறிப்பில் 05.10.2020 தேதிய குறிப்பின்படி கோரியுள்ளதை தொடர்ந்து, தற்போது முககவசம் இருப்பு இல்லாததாலும் மேலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி நகராட்சி பகுதியில் அரசு வழிக்காட்டுதலின்படி கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, முககவசம் 15,000 (**Mask**) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து கொள்முதல் செய்து பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.1.30 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **ந.க. எண்.1865/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1272 நாள்.29.10.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.6

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட நடமாடும் கொரோனா பரிசோதனை வாகனங்கள் இரண்டு ஏற்பாடு செய்ய நகராட்சியில் உள்ள பொது சுகாதார பயன்பாட்டில் உள்ள டாடா ஏஸ் வாகனங்கள் இரண்டினை கொரோனா தடுப்பு பரிசோதனை வாகனங்களாக மாற்றி பயன்பாட்டில் கொண்டுவர பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | வாகனம் ஒன்றுக்கு | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | Arunai Engineering Works Plot No. 02.Indira Nagar, | நடமாடும் கொரோனா பரிசோதனை வாகனங்கள் இரண்டு ஏற்பாடு செய்ய | 1 வாகனம் +GST 18% | 1,99,361/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | Selai Road, Thiruvallur- 602001. | நகராட்சியில் உள்ள பொது சுகாதார பயன்பாட்டில் உள்ள டாடா ஏஸ் வாகனங்கள் இரண்டினை கொரோனா தடுப்பு பரிசோதனை வாகனங்களாக மாற்றி பயன்பாட்டிற்கு கொண்டுவர பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு | | |
| 2. | Kumaran Arts, No 5/2-3, C.V Naidu Salai, Thiruvallur-602001. | | 1 வாகனம் +GST 18% | 2,00,500/– |
| 3. | Infinity Signage System No.33, VM Nagar, Thiruvallur - 602001. | | 1 வாகனம் +GST 18% | 2,15,000/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **Arunai Engineering Works** நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.3582/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1273** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை போரா பிளாஸ்டிக் பைகளில் சேகரம் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1. | D. Janagamaharajan J.J Enter prises, No. 60, Bajanai Kovil Street, Thiruverkadu, Chennai-77. | திருவேற்காடு நகராட்சி பகுதியில் தினசரி சேகரம் செய்யப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை போரா பிளாஸ்டிக் பைகளில் சேகரம் செய்யும் பணிக்கு– போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் சப்ளை – செய்தல். | 1 போரா பைககள்<br>1பாட்டில் பை | ரூ.16/–<br>ரூ.10/– |
| 2. | Arun Plastic Bags No.122B, Kamadhenu Nagar , 6th Cross Street, Thiruverkadu, Chennai-77. | | 1போரா பைகள்<br>1பாட்டில் பை | ரூ.20/–<br>ரூ.14/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய D. Janagamaharajan J.J Enterprises என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றப்பொருள் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1274** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை நகராட்சி பகுதியிலிருந்து அப்புறப்படுத்திட ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1. | என். செல்வராஜ் எண்.25, சாஸ்திரி தெரு, கீழ் அயனம்பாக்கம், சென்னை–75. | திருவேற்காடு நகராட்சி பகுதியில் தினசரி சேகரம் செய்யப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை நகராட்சி பகுதியிலிருந்து அப்புறப்படுத்துதல் – பணிக்கு | 1 வாகனத்திற்கு ஒரு நடைக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ.8,500/– |
| 2. | பி. சந்திரன் எண்.27,அன்னை தெராசா தெரு, கோல்டன் ஜார்ஜ் நகர், நெற்குன்றம், சென்னை–77. | | 1 வாகனத்திற்கு ஒரு நடைக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ. 10,500/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய **என். செல்வராஜ்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றப்பொருள் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1275** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரப் பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் பரவலை தடுத்திடவும் மற்றும் இந்நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகள் மற்றும் அப்பகுதி முழுவதும் கிருமி நாசினி தெளித்திடவும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்திட விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பதிவிற்கும் மற்றும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.961/2020/எச்1)

| வ. எண். | பணியின் விவரம் | உத்தேச செலவினம் (இலட்சத்தில்) |
|---|---|---|
| அ | பொது சுகாதாரப் பணிகளுக்கு நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பாதித்த பகுதிகளில் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளை சுற்றிலும் காலை, மாலை தினசரி இருவேளைகளிலும் **லைசால்** என்னும் கிருமி நாசினி தெளித்து பணிகள் மேற்கொள்ள லைசால் 2500 லிட்டர் சப்ளை செய்தல் (ந.க.எண். 961/2020/எச்1) | ரூ.8.50 |
| ஆ. | பொது நிதியின் கீழ் பொது சுகாதாரப் பிரிவிற்கு தினசரி பணியாளர்களின் பாதுகாப்பினை கருதியிம் மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி இலவசமாக வழங்கிடவும் மற்றும் அரசு வழிக்காட்டுதலை மீறுபவர்களுக்கு அபராதம் விதித்து முககவசம் வழங்கிடவும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் முககவசம் 5000 மற்றும் கையுறை 1000 (**Mask, Reusable Mask and Cloves**) சப்ளைசெய்தல்(ந.க.எண்.1865/2020/எச்1) | ரூ.1.10 |
| இ. | பொது சுகாதாரப் பணிகளுக்கு நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பாதித்த பகுதிகளில் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளை சுற்றிலும் **பிளிச்சிங் பவுடர்** என்னும் கிருமி நாசினி தெளித்து பணிகள் மேற்கொள்ள பிளிச்சிங் பவுடர் 5000 கிலோ சப்ளை செய்தல் (ந.க.எண். 3722/2020/எச்1) | ரூ.3.00 |

**அலுவலக குறிப்பு:**

**அ.** மேற்கண்ட அ, ஆ, இ, பணிகளுக்கும் மற்றும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ.** பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டமைக்கும் மேற்படி அ, ஆ, இ, பணிகளுக்கு தனித்தனி விலைப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1276 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்கவும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த **Covid–19** Multi colour Printing Poster, Covid–19 Banner அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பேனர் விபரம் | Emerald Colour Craft | Orient Servies Quality offset Printers | Sri Saraswathy Printing Works |
|---|---|---|---|---|
| 1 | **Covid–19** Multi colour Printing Poster | 9.60 + GST | 9.95+Gst | 10.50+Gst |
| 2 | Covid–19 Banner | 96.00 + GST | 99.00+Gst | 102.00+Gst |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **Emerald Colour Craft** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1277 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

திருவேற்காடு நகராட்சியில் 2020–2021 ஆம் ஆண்டு பொது சுகாதாரப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்தும் வகையில் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும் ஒப்பந்தபுள்ளிகள் கோரவும், இப்பணிகளுக்கான செலவினங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | உத்தேச செலவினம் (இலட்சத்தில்) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|
| ஆ | பொது சுகாதாரப் பணிகள் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முதல்நிலை சேகரிப்பு பணிமட்டுமே நடைபெறுகிறது. இப்பணிக்கு பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது. Bov–க்கள் மூலமாக சேகரம் செய்யப்பட்ட குப்பைகள் நேரடியாக மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் (MCC)–க்கு எடுத்துச்செல்லப்படுவதால், இரண்டாம் நிலை சேகரிப்பு பணிக்காக பயன்படுத்தப்படும் Compactor வாகனங்களின் உபயோகம் தேவையில்லாமல் போய்விட்டது. மேற்குறிப்பிட்ட காம்பேக்டர் வாகனங்கள், சில மாறுபாடுகள் செய்து, திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு உபயோகப்படுத்தவும், மேலும், MCC–யில் | ரூ. 9.80 | 3 மாதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | சேகரமாகும் இயற்கை உரங்களை எடுத்துச்செல்லவும், மக்காத குப்பைகளை, மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் வெளியில் எடுத்துச்செல்லவும் பயன்படுத்தலாம். எனவே, பயன்பாடு இல்லாமல் இருக்கும் இரண்டு காம்பேக்டர் வாகனங்களை திடக்கழிவு மேலாண்மை பணிகளில் பயன்படுத்தப்படும் Tipper Lorry போன்று மாற்றியமைத்து தரும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், இதற்கான செலவினத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.**( ந.க.எண். 3582/2020/எச்1 )** | | |
| ஆ. | நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் தினசரி மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்ய 11 (Tata Ace) எண்ணிக்கையில் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி வாகனங்களை தினசரி காலை,மாலை இயக்கப்படுவதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு சரிசெய்யப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது இதனால் பொது சுகாதார பணியில் தொய்வு ஏற்படுகிறது எனவே, மேற்படி Tata Ace வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும்,இதற்கான ஆகும் தோராய செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 2977/2020/எச்1)** | ரூ. 9.50 | 12 மாதங்கள் |
| இ. | பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள டிப்பர் லாரி –1, Disalting வாகனம்–1, Bobcat-1, JCB-1 என்று மொத்தம் 4 கனரக வாகனங்கள் உள்ளன. மேற்படி கனரக வாகனங்களை பொது சுகாதாரப் பணி மற்றும் பொறியியல் பிரிவு இன்றியமையாத பணியில் ஈடுப்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்திடவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், ஆண்டு பராமரிப்பு அவசியமான பணி என்பதால், மேற்படி வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்திடவும், வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மற்றும் இதற்கான தோராய செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 2977/2020/எச்1)** | ரூ.9.90 | 12 மாதங்கள் |
| ஈ. | பொது சுகாதாரப் பணிகளுக்கு தினசரி பேட்டரியால் இயக்கப்படும் 33 (BOV) பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி வானகங்கள்(Bov) –ல் ஏற்படும் சிறிய பழுதுகளை அவ்வப்போது சரிசெய்து வந்தால், துப்புரவு பணிகளில் தரம் மேம்பாடு அடையும் என துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வாகனங்களில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வது அவசியமான பணியாகும். ஆகவே, மேற்படி BOV வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து கொள்ளவும், ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2283/2020/எச்1)** | ரூ.9.50 | 12 மாதங்கள் |

**அலுவலக குறிப்பு:**

அ. அ) ஆ) இ) ஈ) ஆகிய நான்கு பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

ஆ. நான்கு பணிகளுக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விளம்பரத்தினை தினசரி நாளிதழில் வெளியிடவும், பணிகளுக்கான செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1278** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.12

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்திடவும், அரசு வழிகாட்டுதல் பின்பற்றி பொது மக்களுக்கு முககவசம் வழங்கிட விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | Unicorn Services and Traders, No.4/4, Murugapillai Nagar, 1st Street Kumananchavadi, Poonamallee, Chennai-56. | நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுத்திட பொதுமக்களுக்கு முககவசம் வழங்கிட முககவசம் சப்ளை செய்தல். | 1 No GST 5% உள்பட | **ரூ.8.40** |
| 2. | Surgipride Enterprises PVT. LTD, No.3/5 Meenakshi Street, Senthamizh Nagar, Ramapuram, Chennai-89. | | 1 No GST 5% உள்பட | **ரூ.10.50** |
| 3. | Med -Needs , No.24, 3rd Street, Shanmuga Nagar, Annexe, Thiruverkadu, Chennai-77. | | 1 No GST 5% உள்பட | **ரூ.10.55** |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய Unicorn Services and Traders விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றப்பொருள் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1279** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், நகராட்சி பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக விளம்பர அறிவிக்கை களப்பணியாளர்கள் 75 நபர்கள் வெளிக்கொணர்வு முறையில் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய **Bright Advertising** என்ற நிறுவனத்தின் மூலம் **மக்கள் குரல் தினசரி நாளிதழில்** 01.09.2020 அன்று விளம்பரம் செய்தமைக்கும், மற்றும் **M/s.Eyedea Brand Solutions, 09.10.2020** அன்று நடைபெறும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி **புரட்சி தலைவி நமது அம்மா** 25.09.2020 நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கும் பட்டியல் தொகை கீழ்கண்டவாறு மேற்படி விளம்பர நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3572/2020/எச்1)

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | **Bright** **Advertising No.13. Moores Road, Moores Garden, Thousand Light , Chennai-600006.** | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு (DBC) பணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் – தருவித்தல். | 8968/20-21 05-09-2020 | 25516.00 |
| 2. | **M/s.Eyedea Brand Solutions, 5-F, 5th Floor, JP Tower, 7/2, Nungambakkam High Road, Chennai-600034** | திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணியினை மேற்கொள்ள மக்காத செல்லுதல், குப்பைகளை சேகரம் செய்ய 5 எண்ணிக்கையில் டிராக்டர் சப்ளை செய்து மற்றும் சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை பாதுகாப்பான முறையில் பராமரித்திட போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் –சப்ளை | 3611/20-21 25-09-2020 | 26460.00 |
| | | | **மொத்தம்** | **51976.00** |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர்(ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும் மற்றும் பணிக்கான தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1280 நாள்.29.10.2020**

**தீர்மானம் : (1) மற்றும் (2) அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.14

திருவேற்காடு நகராட்சியில் தற்போது தீவிரமாக பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தொற்று பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம், அவர்களின் கொரோனா வைரஸ் தடுப்பு ஆய்வு கூட்ட அறிவுரையின்படி நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று பாதித்த பகுதிகளில் **மருத்துவ முகாம் (Medical Camp)** நடத்திடவும் அதன் விவரங்களை **(Sample List)** கணிணியில் பதிவேற்றம் செய்யவும் மேலும், பதிவேற்றம் செய்யப்பட்ட பட்டியலை மருத்துவ ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கவும் மற்றும் தொழிற்சாலைகளில் எடுக்கப்படும் **மருத்துவ பரிசோதனை மாதிரி** விவரங்களையும் கணிணியில் தினசரி தவறாமல் பதிவேற்றம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, **இரண்டு புள்ளிவிவரக் குறிப்பாளர்களை** ஆகஸ்ட் 2020, செப்டம்பர் 2020 மற்றும் அக்டோபர் 2020 ஆகிய மூன்று மாதங்களுக்கு பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 21.10.2020 தேதிய குறிப்பின்படி மேற்படி இரண்டு புள்ளி விவர குறிப்பாளர்கள் பணிக்காலம் 31.10.2020 முடிவடைவதால், மேலும், நவம்பர் 2020 ஒரு மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய குறிப்பில் கோரியுள்ளதை தொடர்ந்து, தற்போது நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பற்றிய புள்ளி விவரங்கள் கணிணியில் பதிவு செய்ய நவம்பர் 2020 வரை

பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான ஆகும் செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1281 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.15</u>**

திருவேற்காடு நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் காய்ச்சல் கணக்கெடுப்பு பணி, மெடிக்கல் கேம்ப், தூய்மை பணிகள் தொற்று நோயினால் பாதிப்பட்டவர்களை கவனித்து கொள்வது அவரது தொடர்பில் உள்ளவர்களை கண்காணிப்பது, மாத்திரைகள் கொடுப்பது, கிருமி நாசினி தெளிப்பதை ஆய்வு செய்வது மேலும், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கும் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு தேவையானவற்றை வாங்கி வழங்குவது போன்ற பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி Focus Volunters என்ற பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுத்திட இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் 21.10.2020 தேதிய குறிப்பின்படி நவம்பர் 2020 ஒரு மாத காலத்திற்கு பணியாளர்களை வெளிகொணர்வு முறையில் தருவித்திட கோரியுள்ளதை தொடர்ந்து, ஏற்கெனவே, Focus Volunters பணியாளர்களை சப்ளை செய்யும் Vidivelli Rural Development Trust நிறுவனத்திற்கு நவம்பர் 2020 ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும் மற்றும் இதற்கான செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.3637/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1282 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.16</u>**

திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் அலுவலக உதவியாளர் மற்றும் ஓட்டுநர்கள் ஆகியோர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் **சீருடைகள், காலனிகள், கைகளை கழுவும் சோப்புகள் மற்றும் சீருடை தைப்பதற்கான தையல் கூலி** இந்த ஆண்டிற்கு (2020–2021) பணியாளர்களுக்கு வழங்கிட அரசு நிறுவனமான தமிழ்நாடு கோ– ஆப்டெக்ஸ் மற்றும் காதிகிராப்ட் நிறுவனத்தில் நேரடியாக கொள்முதல் செய்ய இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1283 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.17</u>**

இந்நகராட்சி சொந்தமான பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் **Tata Ace** வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் 14.11.2020 உடன் முடிவடைவதால் அடுத்த ஒரு வருட காலத்திற்கு காப்பீடு தொகை ரூ.215238/– கீழ்க்குறிப்பிட்டுள்ள வாகனங்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டணம் The New India Assurance Company Limited நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**வாகனங்களின் விவரம்:–**

| S.No | Vehicle No | Expiry Date | Gross Premium |
|---|---|---|---|
| 1. | TN 20 J 8957 ( TATA ACE) | 28/11/2020 | 20.191 |
| 2. | TN 20 U 1072 ( TATA ACE) | 12/11/2020 | 21.960 |
| 3. | TN 20 AB 7411 ( TATA ACE) | 14/11/2020 | 23.836 |
| 4. | TN 12 AB 7437( TATA ACE) | 14/11/2020 | 23.836 |
| 5. | TN 12 AB 7449( TATA ACE) | 14/11/2020 | 23.836 |
| 6. | TN 12 U 1038 ( TATA ACE) | 12/11/2020 | 21.960 |
| 7. | TN 12 AB 7456( TATA ACE) | 14/11/2020 | 23.836 |
| 8. | TN 12 AB 7439( TATA ACE) | 14/11/2020 | 23.836 |
| 9. | TN 12 T 6859 (JCB) | 12/11/2020 | 31.947 |
| | | Total | 215.238 |

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டமைக்கு மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1284** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.18</u>**

திருவேற்காடு நகராட்சியானது, 2004ம் ஆண்டில் திருவேற்காடு பேரூராட்சியிலிருந்து திருவேற்காடு நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தும் போது, பேரூராட்சி பராமரிப்பில் இருந்த சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள்,தெருவிளக்குகள், குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், ஆழ்துளை குழாய் கிணறுகள், குடிநீர் தெருக்குழாய்கள், பைப்லைன்கள், பூங்காக்கள் மற்றும் அலுவலக கட்டிடங்கள் என பராமரிப்பில் இருந்த அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துகள் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆனால், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வந்திருந்த 6 தொடக்கப்பள்ளிகள் மற்றும் 2 நடுநிலைப்பள்ளிகள் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

தற்போது, நகரில் பல்வேறு முன்னேற்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகள், ஏதும் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளாக இல்லாமல் இருக்கிறது. மேலும், தேர்தல் மையங்களில் பள்ளிகளை பராமரிப்பு மேற்கொள்வதிலும் சிரமமாக உள்ளது.

எனவே, கீழ்க்கண்டுள்ளவாறு குறிப்பிட்டுள்ள பள்ளிகளை திருவேற்காடு நகராட்சிக்கு நிலமாற்றத்துடன் கூடிய வகையில் கட்டிடங்களை ஒப்படைக்கவும், மேலும், இந்நகராட்சியின் மூலம் பராமரித்துக்கொள்ளவும் அதற்கான உரிய கருத்துருவினை சம்பந்தபட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒன்றியத்தின் விபரம் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 1. | வில்லிவாக்கம் | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, அயனம்பாக்கம் |
| 2. | வில்லிவாக்கம் | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, இராஜாங்குப்பம் |
| 3. | வில்லிவாக்கம் | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, நூம்பல் |
| 4. | வில்லிவாக்கம் | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, புளியம்பேடு |
| 5. | வில்லிவாக்கம் | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி, வேலப்பன்சாவடி |
| 6. | வில்லிவாக்கம் | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, கோலடி |
| 7. | பூவிருந்தவல்லி | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி, வீரராகவபுரம் |
| 8. | பூவிருந்தவல்லி | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி, சுந்தரசோழபுரம். |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்

ஆ) மேற்கண்ட பள்ளிகளை உரிய அனுமதியுடன் இந்நகராட்சியின் மூலம் பராமரித்திடவும், மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1285** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.19</u>**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவின் கீழ் இயங்கும் குடிநீர் வாகனம் எண்.TN 20 L 5952 என்ற வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு (Insurance) **20.10.2020** அன்றுடன் முடிவு பெறுவதால் **21.10.2020** முதல் **20.10.2021** வரையிலான ஒரு வருட காலத்திற்கு மேற்படி வாகனத்திற்கு காப்பீடு புதுப்பித்தல் செய்திட வேண்டி, அதற்கான கட்டணம் The New India Assurance Compaly Ltd., நிறுனத்தாரின் புதுப்பித்தல் அறிவிப்பு கடிதம் படி காப்பீடு தொகை ரூ.**30,285/–** என பெறப்பட்டடுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு காப்பீடு தொகையினை பொது நிதியிலிருந்து காசோலையாக செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

**<u>1.</u>**அனுமதி அளிக்கலாம்.

**2.**மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை செலுத்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1286 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.20</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இளம் பொறியியல் பட்டதாரிகளுக்கு திருவேற்காடு நகராட்சியில் Intership Training (TULIP) பயிற்சி பெறுவதற்கான விளம்பர அறிவிக்கை மற்றும் பொது நிதி **2020–21**–ன் கீழ் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை ஒரு வருட காலத்திற்கு தனியார் மூலம் மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு கடிதத்தினை அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் **M/s.Eyedea Brand Solutions, 5-F, 5th Floor, JP Tower, 7/2, Nungambakkam High Road, Chennai-600034** என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | **M/s.Eyedea Brand Solutions, 5-F, 5th Floor, JP Tower, 7/2, Nungambakkam High Road, Chennai-600034** | இளம் பொறியியல் பட்டதாரிகளுக்கு திருவேற்காடு நகராட்சியில் Intership Training (TULIP) பயிற்சி பெறுவதற்கான விளம்பர அறிவிக்கை | <u>1796/20-21</u> 02-09-2020 | 25872.00 |
| 2. | | நகராட்சி பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை ஒரு வருட காலத்திற்கு தனியார் மூலம் மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு | <u>1812/20-21</u> 15-09-2020 | 90563.00 |
| | | | மொத்தம் | **116435.00** |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

1.அனுமதி அளிக்கலாம்.

**2.**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும் மற்றும் பணிக்கான

தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1287 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்.21**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பூங்காக்கள் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 144 ஊராடங்கு உத்திரவு கடந்த மார்ச் 2020 முதல் அமலாக்கத்தில் இருந்த காரணத்தால் அனைத்து பொதுமக்களுக்கு நோய் தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு பூங்காக்களை அனைத்தும் முடி வைக்குமாறு தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மேற்படி பூங்காக்களை திறந்த தமிழ்நாடு அரசு அனுமதி அளித்ததை தொடர்ந்து, மேற்படி பூங்காக்களை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்படி பூங்காக்களை பல மாதங்களாக மூடப்பட்டிருந்த காரணத்தால், அப்பூங்காக்களில் அசுத்தம் ஏற்பட்டு செடி மற்றும் கொடிகள் படர்ந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, கீழ்க்குறிப்பிட்டுள்ள பூங்காவினை முழுமையான அளவில் சுத்தம் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு தேவையான பணியாளர்களை சப்ளை செய்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண். | பூங்காவின் பெயர் |
|---|---|---|
| 1. | 1 | சென்சூரியன் அவென்யூ |
| 2. | 2 | நியூ சென்னை சிட்டி |
| 3. | 5 | கீசன் நகர் |
| 4. | 5 | ஐஸ்வர்யா நகர் |
| 5. | 5 | எஸ் (அன்) பி குடியிருப்பு |
| 6. | 6 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் தேவதாஸ் நகர் |
| 7. | 6 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் 3வது பிரதான சாலை |
| 8. | 6 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் |
| 9. | 6 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் |
| 10. | 6 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் |
| 11. | 7 | நூம்பல் மகாலட்சுமி நகர் |
| 12. | 8 | ஐ.சி.எல் காலனி |
| 13. | 10 | கேந்திரிய விஹார் |
| 14. | 11 | மாதிராவேடு |
| 15. | 11 | கோ–ஆப்ரேடிவ் நகர் |
| 16. | 11 | கோ–ஆப்ரேடிவ் நகர் அறிஞர் அண்ணா தெரு |
| 17. | 12 | பல்லவன் நகர் |
| 18. | 14 | கற்பகாம்பாள் நகர் |
| 19. | 14 | பாரதி நகர் |
| 20. | 15 | கீரின் பார்க் |
| 21. | 15 | மகாலட்சுமி நகர் |
| 22. | 15 | சூரியநாராயணன் நகர் |
| 23. | 16 | காயத்திரி நகர் |
| 24. | 17 | TTS நகர் |
| 25. | 17 | பாலகிருஷ்ணா நகர் |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**நகர்மன்ற தீர்மான எண்.1288** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.22

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2020–21–ன் கீழ் தார்சாலைப்பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு கடிதத்தினை அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் **M/s.Eyedea Brand Solutions, 5-F, 5th Floor, JP Tower, 7/2, Nungambakkam High Road, Chennai-600034** என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, அந்நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | **M/s.Eyedea Brand Solutions, 5-F, 5th Floor, JP Tower, 7/2, Nungambakkam High Road, Chennai-600034** | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2020–21–ன் கீழ் தார்சாலைப்பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு | 1888/20-21<br>24-09-2020 | 144795.00 |
| | | | மொத்தம் | **144795.00** |

**அலுவலக குறிப்பு :–**

1.அனுமதி அளிக்கலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும் மற்றும் பணிக்கான தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1289** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.23

இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் பல்வேறு பிரிவுகளில் உள்ள கோப்புகளை கணினி பதிவேற்றம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கோப்புகளை அனைத்து கணினியில் பதிவேற்றம் செய்யப்படுவதால் BSNL இணையதளம் வசதி அடிக்கடி மின்கேபிள் துண்டிப்பு ஏற்படுவதுடன் பணிகள் முழுவதும் பாதிப்பு அடையும் வகையில் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு போதிய வசதி செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. மேற்படி நிலையினை சரி செய்யும் வகையில் தனியார் நிறுவனமான M/s.Atria Convergence Tenchnologies Limited., Block No.143, old Door No.30-c, South Boag Road, New No.5, Chevalier Shivaji Ganesan Road, Chennai-17 நிறுவனத்திடமிருந்து புதிய இணைப்பு வழங்க கேட்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தின் மூலம் அனைப்பு பிரிவுகளுக்கு இணையதளம் வசதி இணைப்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்படி இணைப்பு வழங்கப்பட்டமைக்கான மாதந்திர கட்டணம் ரூ.5539/–ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி இணையதளம் வசதி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தின் மூலம் இணைப்பு வழங்கியமைக்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1290** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.24

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 23.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பூங்காக்களை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்தல். | 5.00 | G.மதிவேலன்<br>K.அருண்குமார் | 0.34 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.27 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1291 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.25

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | இராஜங்குப்பம் மெட்ரோசிட்டி பிரதான சாலையில் 7மீ உயரமுள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 80 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.70 | 1. M/s.Sunview Enterprises,<br>2.M/s.Mahalakshmi Enterprises, | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.29% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | இராஜங்குப்பம் மெட்ரோசிட்டி குறுக்கு தெருக்களுக்கு 7மீ உயரமுள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 80 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.70 | 1. M/s.Sunview Enterprises,<br>2.M/s.Mahalakshmi Enterprises, | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.29% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1292 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.26

திருவேற்காடு நகராட்சிக்கு புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தில் பல்வேறு பிரிவுகள் இயங்கி வருகிறது. மேற்படி பிரிவுகளில் கோப்புகளை கணினியின் மூலம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருவதால், மேற்படி பிரிவுகளுக்கு தேவையான

இணையதளம் (Networking Connection) வசதியும், மேலும், பொதுமக்கள் பாதுகாப்பு வந்து செல்வதை கண்காணிக்கும் வகையில் கேமராகளை புதிய அலுவலகத்தில் பொருத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1293 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.27

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அயனம்பாக்கம் கிராமம் வார்டு எண்.4–ல் எல்லையம்மன் கோயில் தெரு பகுதியில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு மூலம் ஏற்கனவே சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் பொதுமக்களுக்கு தேவையான மேம்பாட்டு வசதிகளை செய்து தர கோரியதை தொடர்ந்து, சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் பொது இடத்தில் பொதுமக்களுக்கு தேவையான மேம்பாட்டு வசதிகளை செய்து தர அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1294 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.28

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள கீழ்அயனம்பாக்கம் மயான சாலைக்கு (Burial Ground) சாலை பழுதுதடைந்துள்ளதால் வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் போக்குவரத்து இடையூறாகவும் உள்ளது. எனவே, பொது மக்களின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி மேற்கண்ட சாலைக்கு தார்தளம் புதுப்பிக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1295 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.29

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள அக்ரஹாரம் குறுக்கு தெருவில் உள்ள சாலை கனக வாகனங்கள் அதிக அளவில் செல்வதாலும், வாகன ஓட்டிகளுக்கும், போக்குவரத்து இடையூறாகவும் உள்ளது. எனவே, பொது மக்கள் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி, மேற்கண்ட சாலைக்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1296 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.30

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18ல் உள்ள லோட்டஸ் நகர் பிரதான சாலை பருவ மழையில் மிகவும் பழுதடைந்து, சேரும் சகதியுமாக உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் நிலையில் உள்ளது. எனவே, பொது மக்கள் அவசியத்தினை கருதி, மேற்கண்ட சாலைக்கு செப்பணிடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1297 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.31

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள வானகரம் அம்பத்தூர் பிரதான சாலையில் மழைநீர் தேங்கி வெளியேற வழிவகை இல்லாத நிலையில் உள்ளதால், பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாகவும், பொது சுகாதார கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, பொது மக்கள் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி, மேற்கண்ட பகுதிக்கு சிமெண்ட் தளம் (RCC) கொண்ட சிறுபாலம் அமைத்திட அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1298 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.32

திருவேற்காடு நகராட்சி பகுதியில் Revolving Fund திட்ட நிதியின் கீழ் முதற்கட்டமாக 9000 குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் இணைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து, மேற்கண்ட பணிகளில் மதிப்பீட்டில் வீட்டு இணைப்புகள் வழங்க 6மீ நீளம் வரை மட்டுமே வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி சென்னை அருகில் உள்ள வளர்ந்து வரும் நகராட்சியாக உள்ளதாலும், ஒரு சில தெருக்கள் விரிவடைவதால் மேற்படி மதிப்பீட்டின்படி குடிநீர் இணைப்புகள் வழங்க இயலாத நிலை உள்ளதாலும், குடிநீர் குழாய்கள் அமைக்கப்படாத பகுதிகளில் பிரதான குழாய் அமைக்கப்பட வேண்டியுள்ளதால், பொது மக்களுக்கு தடையின்றி இணைப்புகள் வழங்கவும் அதற்காக தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1299 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.33

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை பசுமை உரக்குடில்களுக்கு கொண்டு கொண்டு சென்று தரம் பிரிக்கப்பட்டு உராமாக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வார்டு எண்.5ல் கஸ்தூரி எஸ்டேட் பகுதியில் இயங்கி வரும் பசுமை உரக்குடில் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1300 நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.34

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 4 | அயனம்பாக்கம் மயான இடுகாட்டில் குடிநீர், மின்விளக்கு மற்றும் காரியமேடை போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல். | 6.50 |
| 2. | 5 | கீசன் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 7.00 |
| 3. | 5 | இராஜாங்குப்பம் யாதவர் தெருவிற்கு சிமெண்ட தளம் மற்றும் பேவர் பிளாக் வசதிகள் செய்தல். | 9.90 |
| 4. | 5 | இராஜாங்குப்பம் பெருமாள் கோயில் தெருவிற்கு பேவர் பிளாக் அமைத்தல் | 3.00 |
| 5. | 5 | இராஜாங்குப்பம் யாதவர் தெருவின் பக்கவாட்டில் உள்ள பகுதிக்கு பேவர் பிளாக் அமைத்தல். | 9.90 |
| 6. | 5(ம)6 | அக்ரஹாரம் மற்றும் ராணி அண்ணா நகர் பகுதிக்கு புதியதாக குடிநீர் பைப்லைன் அமைத்தல். | 3.00 |
| 7. | 11 | மாதிராவேடு கோ–ஆப்ரேடிவ் நகர் பகுதிக்கு புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல். | 1.10 |
| 8. | 11 | நூம்பல் கிராமம் மாதிராவேடு மற்றும் வீரராகவபுரம் கிராம் காடுவெட்டி பகுதியில் உள்ள நகராட்சி சொந்தமான இடத்தில் பொருட்களை பாதுகாப்பாக வைத்துகொள்ள கால்வனைஸ் தகடு கொண்ட இருப்பு அறை அமைத்தல். | 2.40 |
| 9. | 15 | ஐயப்பா நகர் 2வது தெரு, குறுக்கு தெரு மற்றும் கருமாரியம்மன் நகர் வடக்கு விரிவாக்கம் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 9.70 |
| 10. | 15 | ஐயப்பா நகர் 2வது தெரு, குறுக்கு தெரு மற்றும் கருமாரியம்மன் நகர் வடக்கு விரிவாக்கம் சாலைகளுக்கு பேவர் பிளாக் வசதி அமைத்தல். | 9.70 |
| 11. | 15 | சிவன் கோயில் தெருவிற்கு புதியதாக GI பைப் லைன் அமைத்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல். | 4.50 |
| 12. | – | புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலகத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளுதல். | 5.40 |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1301** **நாள்.29.10.2020**

**தீர்மானம் : அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**